1971 அக்டோபர் 21]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) தற்போது பள்ளி வாடகை இல்லாமல் கூரைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

New Medical Colleges.

*3 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the norms accepted by the Government for opening new Medical Colleges; and

(b) whether there are requisite number of Medical Colleges in this State as per the accepted norms?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை எதுவும் இல்லை.

(இ) இந்த வினா எழுவதற்கு இடம் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Public Health the ratio between the male and female doctors in the State? Further there is a dearth of doctors in the rural areas and may I know how he is going to solve the problem of dearth of doctors?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கேள்வி இந்த மூலக்கேள்வியிலிருந்து எழுவது அல்ல. மருத்துவக் கல்லூரிகள் மக்கள் தொகை அடிப்படையில் எந்த அளவு இருக்க வேண்டும் என்று ஒரு கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதா என்பது மூலக் கேள்வியாகும். ஏறத்தாழ 50 லட்சம் மக்களுக்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற அடிப்படையில் மருத்துவக் கல்லூரிகள் இருக்க வேண்டும் என்ற ஒரு கருத்து, ஏற்கனவே அமைக்கப்பட்ட ஒரு குழுவினுடைய தலைவரான டாக்டர் ஏ.எல். முதலியார் அவர்களால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சற்றேறக்குறைய அதே விகிதாசாரத்தின்படி இன்றைய தினம் தமிழ்நாட்டில் 4 கோடி 10 லட்சம் மக்கள் வாழ்கிற இந்த நேரத்தில், ஏறத்தாழ எட்டு அரசாங்கக் கல்லூரிகளும் ஒரு தனியார்க் கல்லூரியும் இருக்கும் காரணத்தால், ஏறத்தாழ அந்த விகிதாசாரத்தில் மருத்துவக் கல்லூரிகள் மக்களுடைய தேவையை நிறைவு செய்வதாக இருக்கின்றன என்ற கருத்தை அரசாங்கத்தின் சார்பில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

DR. H. V. HANDE : Sir, is it not a fact that recently the Hon. Minister for Public Health has mentioned in the House that there is an attempt on the part of the Government to improve the standard of education in the medical institutions and that one of the reasons for the reduction in the number of seats is that we are not able to cope up with the required standard. May I know whether any positive steps have been taken by the Hon. Minister and if so the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியும் முதல் கேள்வியிலிருந்து எழுவது அல்ல. இருந்தாலும், விளக்குவதற்காக நான் விடையளிக்க விரும்புகிறேன். மருத்துவக் கல்வியினுடைய தரம் உயர்த்தப்படுவதில் தமிழ்நாடு அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. 'தொடர்ந்து' என்றால், முன்னும் கவனம் செலுத்தி வந்திருக்கிறது, இனியும் கவனம் செலுத்தும்—வசதிக்கேற்ப—நிதி நிலைமைக்கேற்ப, அப்படி மருத்துவக் கல்வியினுடைய தரத்தை உயர்த்துவது, கல்விப் பயிற்சியினுடைய நிலையை உயர்த்துவது என்பது மட்டுமல்லாமல், தரம் தாழ்ந்து போவதற்குக் காரணம் அதிக மாணவர்களைச் சேர்ப்பது என்ற நிலைமை இருந்தது தவிர்க்கப்படவேண்டும் என்பதற்காக, ஓரளவு மட்டும் அந்த மாணவர்களுடைய எண்ணிக்கை இப்பொழுது குறைக்கப்பட்டிருக்கிறது.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know whether there is any proposal to revise the norms that have been prescribed by the Mudaliar Committee?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒரு கொள்கை அரசாங்கத்திற்கு ஆலோசனையாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதை மாற்ற வேண்டுமானால் அதற்குத் தக்க காரணங்கள் வேண்டும். தக்க காரணங்கள் இருப்பதாக அரசு கருதவில்லை.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : தலைவர் அவர்களே, 'தகுதி' என்று குறிப்பிடப்பட்டிருப்பதற்கு விளக்கம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதை அறிந்துகொள்கிற அவரவர் தகுதியைப் பொறுத்தது.

அவலூர்பேட்டை மருத்துவமனைக்கு மருந்து விநியோகம்.

* 4 வினா—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

செஞ்சி வட்டம், அவலூர்பேட்டையில் உள்ள ஆரம்ப சுகாதார மருத்துவ மனைக்குத் தேவையான மருந்துகளை அரசே நேரிடையாக வழங்க ஏற்பாடு செய்யும் உத்தேசம் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : செஞ்சி வட்டம், அவலூர்பேட்டையில் ஆரம்ப சுகாதார மருத்துவமனை என்ற பெயரால் ஒரு மருத்துவமனை இல்லை. ஊராட்சி மருத்துவமனை ஒன்று மட்டுமே உள்ளது. பொதுவாக ஊராட்சி மருத்துவ மனைகளுக்குத் தேவையான மருந்துகளை, அரசினரே நேரடியாக வழங்க ஏற்பாடு செய்யும் திட்டமொன்று அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.